**ஜுலை – 15**

# TNPSC துளிகள்

- அஸ்ஸாம் முதலமைச்சர் சர்பானந்தா சோனோவால் அம்மாநிலத்தின் முதலாவது கலாச்சார பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்கள்

- சிவ் நாடார் பல்கலைக்கழகம் மற்றும் சாய் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களை அமைக்கும் மசோதாவை தமிழ்நாடு சட்டசபை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- சிவநாடார் பல்கலைக்கழகம் எஸ்எஸ்என் அறக்கட்டளையின் தொழிலதிபர் சிவ் நாடாரால் நிறுவப்பட இருக்கிறது.
- சாய் பல்கலைக்கழகம் நாஸ்காம் நிறுவனர் மற்றும் வழிகாட்டியாளர் கே.வி. ரமணியால் நிறுவப்பட இருக்கிறது.
- சட்டமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த இரண்டு மசோதாக்களின் விதிமுறைகளின் படி இரண்டு பல்கலைக்கழகங்களும் சுயநிதி நிறுவனங்களாகும். மேலும் இப்பல்கலைக்கழகங்களுக்கு கல்லூரிகளை அமைக்கவும், பிராந்திய மையங்களை அமைக்கவும் மற்றும் வளாகங்கள் மற்றும் ஆய்வு மையங்களை அமைக்கவும் இம்மசோதாவின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- தற்பொழுது தமிழகத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் இல்லாததால், தமிழக அரசின் இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்கும் முடிவானது முக்கியத்துவம் பெறுகிறது. தனியார் பல்கலைக்கழகமாக இருந்த புகழ் பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பொறுப்பை தமிழக அரசு 2013 ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. எனினும் தமிழகத்தில் ஏராளமான நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.
- இப்பல்கலைக்கழகங்கள் ஒவ்வொரு துறைப் படிப்பிலும் 35% சதவீத இடங்களை தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும். நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி வகுப்புரீதியிலான ஒதுக்கீட்டைத் தொடர்ந்து இந்த 35 சதவீத இட ஒதுக்கீட்டை இந்தப் பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ளலாம்.

# பொருளாதாரச் செய்திகள்

## சீனாவின் வங்கிக்கு இந்தியா இசைவு

- சீன அரசாங்கத்தினுடைய கடன் அளிக்கும் மிகப்பெரிய நான்கு வங்கிகளில் ஒன்றான பேங்க் ஆப் சீனா வங்கியானது இந்தியாவில் தனது கிளைகளைத் திறக்க மத்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கொள்கையளவில் ஒப்புதல் பெற்றுள்ளது.
- பெய்ஜிங்கைத் தலைமையாகக் கொண்டு செயல்படும் இந்த கடன் அளிக்கும்

வங்கியானது 51 நாடுகளில் தனது கிளைகளைக் கொண்டிருக்கிறது.

- வங்கிகளை மேற்பார்வையிடும் பேசல் குழுவினால் (Basel Committee) உலகளவில் முறையாக இயங்கும் முக்கியமான வங்கி என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. (Global systematically Important Bank)
- சீனாவின் மற்றொரு கடன் அளிக்கும் வங்கியான இண்டஸ்டிரியல் மற்றும் கமர்ஷியல் பேங்க் ஆப் சீனா வங்கி இந்தியாவில் கிளையைக் கொண்டுள்ளது. இந்த வங்கி தவிர 44 வெளிநாட்டு வங்கிகள் இந்தியாவில் கிளையைக் கொண்டுள்ளன.
- முற்றிலும் முழுமையாக துணை நிறுவன வழியின் மூலம் செயல்படும் வெளிநாட்டு வங்கிகள் உள்நாட்டு வங்கிகளுக்கு இணையாக நடத்தப்படுவார்கள் என்றும், கிளையைத் தொடங்க உரிமம் பெறுவது தாராளமாக்கப்படும் என்றும் மத்திய ரிசர்வ் வங்கி உறுதி அளித்துள்ளது.
- கிளைகள் மூலமாக செயல்படும் வெளிநாட்டு வங்கிகள் இந்தியாவில் ஒவ்வொரு கிளையைத் தொடங்க மத்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெற வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## அஸ்ஸாமில் நீதிபதியான திருநங்கை

- அஸ்ஸாம் மாநிலம் முதல் திருநங்கை நீதிபதியான சுவாதி பிதான் பரூக் – ஐப் பெற்றுள்ளது. குவஹாத்தியில் உள்ள தேசிய லோக் அதாலத்தில் இவர் நடுவராக செயல்படுவார்.
- மேற்கு வங்காளத்தின் ஜோய்தா முண்டால் என்பவர் இந்தியாவின் முதல் திருநங்கை நீதிபதி ஆவார்.
- அடுத்த திருநங்கை நீதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ளவர் மஹாராஷ்டிராவின் வித்யா காம்ப்ளே ஆவார்.

## பாரம்பரிய அமைச்சரவை

- ஒடிசா மாநில அரசானது தனித்துவமான 'பாரம்பரிய அமைச்சரவை' மற்றும் 'ஒடியா மொழி ஆணையம்' ஆகியவற்றை அமைக்க முடிவு செய்துள்ளது. அம்மாநிலத்தில் உள்ள வாழிடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் அம்மாநிலத்தினுடைய உயர்ந்த கலாச்சாரம் மற்றும் மொழியை வளப்படுத்தவும் இம்முடிவை அம்மாநில அரசு எடுத்துள்ளது.
- ஒடிசா மாநில அரசின் அமைச்சரவைக் கூட்டமானது புவனேஷ்வரில் நடைபெறுவதற்கு மாற்றாக முதன்முறையாக பூரியில் (Puri) நடைபெற்றபோது இம்முடிவு எடுக்கப்பட்டது.
- அம்மாநிலத்தில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களின் விளம்பரப் பலகைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் ஒடியா மொழியில் காட்சிப்படுத்துவது கட்டாயம் என்று அறிவித்துள்ளது.
- ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக ஒடியா மொழி மாநாடு

நடத்தப்படும்.

- ஒடிசாவில் சமய நூல்களை மக்களுக்கு விவரிக்கும் இடமான கிராமங்களில் உள்ள சிறிய குடிசைகளான 'பாகபத் துங்கிஸ்'- ஐ பிரபலப்படுத்த மற்றும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த மானியம் அளிக்கப்படுகிறது.


## நான் ஆங்கிலத்தைக் கண்டு பயப்படவில்லை

- ஹரியானா மாநிலத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கில மொழியை ஊக்கப்படுத்த அம்மாநில கல்வித் துறையானது 'நான் ஆங்கிலத்தைக் கண்டு பயப்படவில்லை' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இதன் நோக்கம் ஆசிரியர்களுக்கு அடிப்படை கட்டுமானத் திறனை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் குழந்தைகள் ஆங்கிலத்தில் அறியவும், படிக்கவும், எழுதவும் மற்றும் பேசவும் ஆசிரியர்கள் உதவுவார்கள்.
- இம்முயற்சியானது ஏற்கனவே 180 ஆரம்பப் பள்ளிகளில் தன்னார்வ தொண்டு நிறுவனமான 'Human a people to people india' என்ற நிறுவனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 180 ஆரம்பப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட இம்முயற்சியானது முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு குழந்தைகளுக்கு பாதுகாப்புப் பெட்டக வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் 'பைகளற்ற முறை' (bag free) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு இதே போன்ற முயற்சியை உத்தரகாண்ட் மாநில அரசு தொடங்கியது. பல்வேறு கட்டங்களாக 18,000 பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து பயிற்று மொழியாக இருந்த இந்தியை ஆங்கிலத்திற்கு அம்மாநில அரசு மாற்றியுள்ளது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் பழங்கால குறுகிய இரயில் பாதை

- 1862 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்கு வந்த 33 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட இந்தியாவின் முதல் குறுகிய இரயில் பாதையான தபோய் – மியாகம் இரயில் பாதை நிரந்தரமாக மூடப்பட இருக்கிறது.
- இந்த இரயில் பாதை விரைவில் அகல இரயில் பாதையாக மாற்றப்பட இருக்கிறது.
- ஏ டபிள்யூ போர்ட் (A.W.ford) என்ற பிரிட்டீஷ் பொறியாளரால் இப்பாதை வடிவமைக்கப்பட்டது.




- 1863 ஆம் ஆண்டு நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. 3 நீராவி இன்ஜின்களை பரோடா மாகாணத்தின் மகாராஜா கேந்திரியோ விலைக்கு வாங்கினார்.
- நாட்டில் பாரம்பரியச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக பாதுகாக்கப்பட உள்ள ஐந்து குறுகிய இரயில் பாதைகளில் ஒன்றாக மேற்கு இரயில்வேயின் தபோய்-மியாகம் இரயில் பாதையை மத்திய ரயில்வே அமைச்சகம் கண்டறிந்துள்ளது.
- மியாகம் – மல்தார் இரயில் பாதை (38 கி.மீ), சரோண்டா – மோட்டி காரல் இரயில் பாதை (19 கி.மீ.), தி பிரதாப் நகர் – ஜம்புசர் இரயில் பாதை (51 கி.மீ) மற்றும் பில்மோரா – வாது இரயில் பாதை ஆகியவை பாதுகாப்பதற்காக கண்டறியப்பட்ட மற்ற இரயில் பாதைகளாகும்.
- இந்த 5 இரயில் பாதைகளும் மொத்தமாக 204 கிலோ மீட்டர் தொலைவு கொண்டது. இப்பாதைகள் குஜராத்தில் உள்ளன. இப்பாதைகள் முந்தைய சுதேச அரசான பரோடா அரசினால் வடிவமைக்கப்பட்டதாகும்.

## 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் சமஸ்கிருதம் மொழி பேசுபவர்கள்

- இந்தியாவில் அதிகம் பேசப்படும் மொழியாக இந்தி மற்றும் அதனுடைய வட்டார மொழிகள் உள்ளன. நாட்டில் 43 சதவீதத்திற்கு அதிகமானோர் தங்கள் தாய்மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.
- மக்கள் பேசும் வெவ்வேறு தென்னிந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலம் ஆகியவை முந்தைய பல தசாப்தங்களில் இருந்ததை விட அதிகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாட்டில் மற்ற மொழிகள் பேசும் மக்களுடன் ஒப்பிடும் போது சதவீத அளவில் இவற்றின் பங்கு சரிந்து கொண்டிருக்கிறது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பதிவாளர் ஜெனரல் அலுவலகம் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையரால் (Office of the Registrar General and Census Commissioner) இத்தகவல்



வெளியிடப்பட்டுள்ளது.

- ❖ இந்தியாவில் அட்டவணைப்படுத்தப்பட்ட 22 மொழிகளில், சமஸ்கிருத (Sanskrit) மொழியானது குறைவான மக்கள் பேசும் மொழியாகும்.
- ❖ பழங்கால மொழியைப் பேசும் மக்களின் சதவீதமானது, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 121 கோடியில் 0.00198 சதவீதம் ஆகும்.
- ❖ போடோ, மணிப்பூரி, கொங்கனி மற்றும் டோகிரி ஆகிய மொழிகளைப் பேசும் மக்களின் எண்ணிக்கையை விட முன்னிலையில் சமஸ்கிருதம் உள்ளது.
- ❖ ஆங்கில மொழியானது அட்டவணைப் படுத்தப்படாத மொழியாகும். ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட மக்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 2.6 லட்சம் ஆகும்.

**English as mother tongue - Top 5** The NEWS Minute

| State | Number of People |
|---|---|
| Maharashtra | 106,656 |
| Tamil Nadu | 24,495 |
| Karnataka | 23,227 |
| West Bengal | 14,945 |
| Rajasthan | 13,202 |

- ❖ மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தாய்மொழி என்பது 'குழந்தைப் பருவத்தில் தாயிடமிருந்து கற்றுக் கொண்டு குழந்தை, பேசும் மொழி' என்று வரையறுக்கப்படுகிறது.

## நூற்றாண்டின் நீளமான முழு சந்திர கிரகணம்

- ❖ மத்திய புவி அறிவியல் அமைச்சகம், 1 மணி நேரம் 43 நிமிடங்கள் கால அளவிலான இந்நூற்றாண்டின் (2001 AD முதல் 2100 AD வரை) நீளமான முழு சந்திரகிரகணம் இவ்வாண்டு ஜூலை 27-28 ஏற்படும் என்று அறிவித்துள்ளது.
- ❖ முழு கிரகணத்தையும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் பார்க்க முடியும்.
- ❖ ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா (கிழக்குப் பகுதிகள்) மற்றும் அண்டார்டிக்கா (கிழக்குப் பகுதிகள்) ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளிலும் இதனைப் பார்க்க முடியும்.
- ❖ இத்தகைய நீண்ட கால முழு சந்திர கிரகணம் இதற்கு முன்பு ஜூலை 16, 2000-ல் 1 மணி நேரம் 46 நிமிடங்கள் என்ற முழுமையான கால அளவிலும் ஜூன் 15, 2011-ல் 1 மணி நேரம் 40 நிமிடங்கள் என்ற முழுமையான கால அளவிலும் ஏற்பட்டது.